செய்தி வெளியீடு எண் : 680 நாள் : 10.04.2023

# செய்தி வெளியீடு

## ரூ.20.13 கோடி செலவில் 12 புதிய மற்றும் 4 தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களை திறந்து வைத்து – ரூ.2.67 கோடி மதிப்பீட்டிலான 10 மீட்பு இழுவை வாகனங்கள் மற்றும் 4 கடற்கரை ரோந்து வாகனங்களின் சேவைகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (10.4.2023) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 20 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 12 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் மற்றும் 4 தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், சென்னை பெருநகர காவல் துறையினரின் பயன்பாட்டிற்காக 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 10 மீட்பு இழுவை வாகனங்கள் மற்றும் 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 கடற்கரை ரோந்து வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது "காக்கும் பணி எங்கள் பணி" என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றும் துறையாகும். பேரழிவு ஏற்படுத்தும் தீயிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்றவைகளிலிருந்தும், பிற அழிவுகளிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் அமைத்தல், பணியாளர்களுக்கு குடியிருப்புகளை கட்டுதல், புதிய வாகனங்களை கொள்முதல் செய்தல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

### தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களை திறந்து வைத்தல்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் சேலம் மாவட்டம் – ஆட்டையாம்பட்டி, திருப்பூர் மாவட்டம் – ஊத்துக்குளி, சிவகங்கை மாவட்டம் – இளையான்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – வையம்பட்டி கடலூர் மாவட்டம் – குமராட்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – நயினார்பாளையம், விழுப்புரம் மாவட்டம் – அன்னியூர், மதுரை மாவட்டம் – திருப்பரங்குன்றம், விருதுநகர் மாவட்டம் –

ஏழாயிரம்பண்ணை, சென்னை மாவட்டம் – கொளத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் – காலவாக்கம், திருவண்ணாமலை – கண்ணமங்கலம் ஆகிய 12 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் மற்றும் விருதுநகர் மாவட்டம் – சிவகாசி, இராணிப்பேட்டை மாவட்டம் – இராணிப்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம் – தாம்பரம், கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூர் ஆகிய 4 தீயணைப்பு நிலையங்களை தரம் உயர்த்தி, மொத்தம் 20 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**<u>மீட்பு இழுவை வாகனங்கள் மற்றும் கடற்கரை ரோந்து வாகனங்களின் சேவைகளை தொடங்கி வைத்தல்.</u>**

2022–2023ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையில், சென்னை பெருநகரக் காவல் போக்குவரத்துப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள பெரும்பாலான இழுவை வாகனங்கள் மிக நீண்டகால பயன்பாட்டினால் அவற்றின் செயல்திறன் குறைந்துள்ளதால் மேம்பட்ட வசதிகளுடன் கூடிய இழுவை வாகனங்கள் வாங்கப்படும் என்றும், சென்னை பெருநகர காவல் துறையின் பயன்பாட்டில் இருந்துவரும் கடற்கரை ரோந்து வாகனங்கள் பழுதடைந்துள்ளதால், அவற்றிற்கு மாற்றாக புதிய கடற்கரை ரோந்து வாகனங்கள் வாங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புகளுக்கிணங்க, சென்னை பெருநகர காவல் துறையினரின் பயன்பாட்டிற்காக 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 10 மீட்பு இழுவை வாகனங்கள் மற்றும் 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 கடற்கரை ரோந்து வாகனங்களின் (Beach Buggies) சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

**<u>மீட்பு இழுவை வாகனங்கள்</u>**

சென்னை பெருநகர காவல் துறையில் போக்குவரத்துக் காவல் பிரிவில் இயங்கிவரும் மீட்பு இழுவை வாகனங்கள் (Wrecker) போக்குவரத்து விதிகளை நடைமுறைப்படுத்துவதிலும், சாலையில் இடையூராக நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்களை உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்தி சாலை பயன்பாட்டாளர்கள் தடையின்றி செல்வதற்கும், சாலைகளில் விபத்துக்கள் ஏற்படும் போது சேதமடைந்து, இயங்கமுடியாத

நிலையிலுள்ள வாகனங்களை துரிதமாக அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீராக்குவதற்கும் உதவி புரிகிறது. மேலும், சாலைகளில் கேட்பாரற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை அங்கிருந்து அகற்றுவதுடன் அதன் உரிமையாளர்களுக்கு சட்டப்படி அபராதம் விதிப்பது மற்றும் அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

சாலை பாதுகாப்பு பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்காக சென்னை பெருநகர காவல் துறைக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 5 புதிய நான்கு சக்கர மீட்பு இழுவை வாகனங்களும், 5 புதிய இருசக்கர மீட்பு இழுவை வாகனங்களும், என மொத்தம் 10 மீட்பு இழுவை வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**<u>கடற்கரை ரோந்து வாகனங்கள்</u>**

சென்னை பெருநகர காவல் துறையினரின் கடற்கரை ரோந்து மற்றும் சுற்றுக்காவல் பணிக்காக கடற்கரை ரோந்து வாகனங்கள் வாயிலாக மெரினா கடற்கரை, அண்ணாசதுக்கம் மற்றும் பெசன்ட் நகர் கடற்கரை ஆகிய இடங்களில் பாதுகாப்பு ரோந்து மற்றும் குற்றச் சம்பவங்கள் ஏதும் நடக்காமல் தடுப்பதற்காக பகல் மற்றும் இரவு நேரங்களில் ரோந்து பணி செய்து வருகின்றனர். இவ்வாகனங்கள் அந்தந்த காவல் நிலையங்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

கடற்கரை ரோந்துப் பணியை சிறப்பாக மேற்கொள்வதற்காக 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நான்கு புதிய கடற்கரை ரோந்து வாகனங்கள் (Beach Buggies) சென்னை பெருநகர காவல் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் மூன்று வாகனங்கள் சுற்றுக் காவல் பணிக்கும், ஒரு வாகனம் சுற்றுக் காவல் மற்றும் கடல் அலைகளில் சிக்கிக்கொண்டவர்களை கண்டறிந்து அவர்களை மீட்டு துரிதமாக சிகிச்சைக்கு கொண்டு செல்லக் கூடிய பணிக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் மணல் பரப்பில் வேகமாக செல்லும் வகையில் நான்கு சக்கர இயக்கியால் இயங்கக்கூடியது ஆகும். ஒலிபெருக்கி வசதியுடன் இவ்வாகனங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் குற்றச்செயல்கள் நடவாமல் தடுத்திட விழிப்புணர்வு ஏற்படுத்தவும், குற்றவாளிகள் யாரேனும் கூட்டத்தில் இருந்தால் FRS செயலி மூலம் அவர்களை கண்டறிந்து குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பண்டிகை தினங்களில் கடற்கரையில் அதிகப்படியான கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், அசம்பாவிதங்கள் ஏற்படாமல் விழிப்புடன் சுற்றுக்காவல் பணி மேற்கொள்ளவும் இவை உதவிகரமாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, இ.கா.ப., சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் திரு. அபாஷ் குமார், இ.கா.ப., மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in